**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 22.07.2026**
**OS. No. 3/2019**
**வழக்கு சாட்சி PW.1– குமார், த/பெ. ரத்தினம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>2 முதல் 8 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**</u>

17) நான் இதற்கு முன்பு குறுக்கு விசாரணையில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.16 மாதிரி வரைபடத்தில் பிழை உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பிழை உள்ளதை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் சமீபத்தில் தான் தெரிந்து கொண்டேன். மேற்கண்ட பிழையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, இதற்கு முன்பு குறுக்கு விசாரணையில் கேட்டபோது தான் பிழை இருப்பது தெரிந்து கொண்டேன். நான் இதற்கு முன்பு குறுக்கு விசாரணை செய்யப்பட்டதற்கும், தற்போதுதற்கும் 45 நாட்கள் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். அந்த பிழையை திருத்துவதற்கு இடைப்பட்ட காலத்தில் முயற்சி ஏதேனும் செய்தோமா என்றால் இல்லை.

18) என் நிரூபண வாக்குமூலத்தில் 2 வது பக்கத்தில் 4 வது பத்தியில் ச.எண்.435/1 ல் உள்ள 240 சதுரடி நிலமும், அதனை ஒட்டியுள்ள புதிய ச.எண்.435/1B யில் உள்ள வண்டிப்பாதை நிலம், அதை ஒட்டி 20 அடி அகலத்தில் கிழக்கு நோக்கி செல்லக்கூடிய வண்டிப்பாதை என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்கும், வா.சா.ஆ–16 மாதிரி வரைபடத்திற்கும் முரண்பாடுகள் உள்ளது என்றால் சரிதான், என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது சரியானது. ஆவணத்திற்கும், சாட்சியத்திற்கும் முரண்பாடுகள் உள்ளதால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

19) என்னுடைய கிரைய ஆவணத்தில் என்னுடைய சொத்தின் சக்குபந்தியில் வண்டிப்பாதை ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பாக வண்டிப்பாதை என்று குறிப்பிடவில்லை. எனக்கு கிரையம் கொடுத்த ராஜேந்திரனின் நிலம், அதனை

தொடர்ந்து 240 சதுரடி பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பாதையை எனக்கு தனியாக கிரையம் செய்து கொடுத்துள்ளாரா என்றால் இல்லை, அதே ஆவணத்தில் பாதை பாத்தியம் குறிப்பிட்டு கிரையம் கொடுத்துள்ளார். என்னுடைய முந்தைய கிரையதாரரான ராஜேந்திரனின் கிரைய ஆவணத்திலேயே அவ்வாறு 240 சதுரடி கொண்ட வண்டிப்பாதை உள்ளதாக எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான், எனக்கு விற்பனை செய்யும் போது அதை பாதையாக காண்பித்து விற்பனை செய்துள்ளார், பாதை பகுதி 240 சதுரடியை தனியாக எனக்கு கிரையம் செய்து கொடுக்கவில்லை.

20) 01.06.1954 ம் தேதியில் 2 ஏக்கர் 14 செண்ட் நிலம் பாத்தியப்பட்டு, அவர்களுக்குள் 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே பாகபிரிவினை செய்து கொண்டு, சுவாதீன அனுபவத்தில் இருந்ததாக சொல்லியுள்ளதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது வாய்மொழி பாகபிரிவினை ஆகும், அதன் அடிப்படையில் தான் அதன் பிறகு சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். 01.06.1954 ம் தேதியிட்ட கிரையம் பத்திரமானது அருணாச்சல மூப்பனார் தான் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியவில்லை.

21) மேற்படி அருணாச்சல மூப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை, எனது சொத்தை அவரது மகனான அருணாச்சலம் என்பவரிடம் கிரையம் பெற்றேன். அருணாச்சல மூப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் நிரூபண வாக்குமூலத்தில் அவருடைய வாரிசுகள் என்று நான் சொல்லியுள்ள நபர்களுக்கு எவ்வளவு நிலம் பாகபிரிவினை மூலம் பிரிந்துள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, அவர்கள் அனுபவத்திலுள்ள நிலம் சம்மந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

22) பொதுவாக ஒரு சொத்தை கிரையம் பெறவேண்டும் என்றால் அந்த சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று பார்த்து தான் கிரையம் பெறவேண்டும் என்றால் சரிதான். என் முன் விற்பனையாளரான அசோகன் என்ன அளவுகள் குறிப்பிட்டு சொத்தை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு குறிப்பாக தெரியவில்லை. நான் மேச்சேரியில் நிதி நிறுவனம் வைத்து நடத்தி வருகிறேன் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், நான் மேச்சேரியில் அக்சயா பைனான்ஸ் என்ற நிதி நிறுவனம் வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நிதி நிறுவனம் நடத்தி வருவதால் இவ்வாறு பாகம் பிரியாத சொத்தை வாங்குவது தான் எனது வேலை என்றால் சரியல்ல. அதனால் தான் ஒரு சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பே அதில் கட்டிடம் கட்டியதாக என் நிரூபண வாக்குமூலத்திலேயே நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு குறைந்த விலைக்கு ஏழைகளை ஏமாற்றி நான் கிரையம் பெறுவது வழக்கம் என்றால் சரியல்ல.

23) என் நிரூபண வாக்குமூலத்தில் 6 வது பக்கத்தில் ச.எண்.435/1B ஆனது தனிப்பட்டாவாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ராஜேந்திரன் சங்கீதா ஆகியோரது பூர்வீக சொத்து என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அதே பக்கத்தில் 3 முதல் 6 பிரதிவாதிகள் அண்டை நிலத்துக்காரர்கள் என்று நான் சொல்வது தவறு என்றும், அவர்கள் தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.182/2018 என்ற பாகபிரிவினை வழக்கு நிலுவையில் உள்ளபோதே கிரையம் பெற்று, பிரதிவாதிகளுக்கு தொந்தரவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

24) முன் பகுதியிலுள்ள சொத்தை சம்மந்தமில்லாத நபரிடம் கிரையம் பெற்றுவிட்டு, நான் பிரதிவாதிகளை தொந்தரவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட அ.வ.எண்.182/2018 ல் நான் கிரையம் பெற்ற ஆவணத்தையும் செல்லாது என்று விளம்புகை செய்ய பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய கிரைய ஆவணத்தையே செல்லாது என்று விளம்புகை செய்யுமாறு வழக்கு நிலுவையில்

இருக்கையில் அதற்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் தனிப்பட்டா உள்ளது என்று கூறி தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட வழக்கில் என்னுடைய கிரைய பத்திரம் செல்லாது என்று தீர்ப்பாகிவிட்டால் என்ன செய்வது என்று தான் அதற்கு முன்பே இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

25) என் நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் 10ல் பத்தி 11ல் தாவா சொத்துக்களில் நுழைய கூடாது என தொடர்ந்து மிரட்டி வந்தோம் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் அது தட்டச்சு பிழை ஆகும், அவர்கள் தான் மிரட்டி வந்தார்கள் என சொல்வதற்கு பதிலாக அவ்வாறு தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. மேற்கண்ட பிழையானது தற்போது தான் எனக்கு தெரியவந்தது. எந்த தேதியில் பிரதிவாதிகள் சொத்தை கிரையம் கொடுக்குமாறு என்னிடம் கேட்டார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் கேட்டார்கள்.

26) என் சொத்தில் நான் கட்டியுள்ள வீட்டிற்கு முறையாக அனுமதி பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அனுமதி பெற்றதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, வேண்டுமென்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் அவ்வாறு அனுமதி பெறவில்லை என்றும், கூட்டுப்பட்டாதாரர்கள் நிலத்தில் நான் வீடு கட்டிதால் தான் அனுமதி வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. என் முன் விற்பனையாளர் பத்திரத்திலேயே தாவா தடம் குறித்து எவ்வித குறிப்பும் இல்லாத பட்சத்தில் என்னுடைய கிரைய ஆவணத்தில் நாங்களே குறிப்பு ஏற்படுத்தி கொண்டு, பிரதிவாதிகளுக்கு தொந்தரவு ஏற்படுத்தவேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

27) நான் மாண்பமை மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.182/2018 மற்றும் அ.வ.எண்.224/2018 என்ற இரு வழக்குகளிலும் ஆஜராகி வருகிறேன் என்றால் சரியல்ல, அ.வ.எண்.182/2018ல் மட்டும் ஆஜராகி வருகிறேன். தாவா சொத்து சம்மந்தமாக எவ்வித பாகபிரிவினையும் ஏற்படாததால்

கூட்டுபங்குதாரர் என்ற அடிப்படையில் அவர்களுக்கு எதிராக வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்கு அனைத்து சங்கதிகளையும் பிரதிவாதிகள் பதிலுரையில் சொல்லியுள்ளார்கள் என்றும், அதை முழுவதும் நான் பார்க்காமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.182/2018 ல் என் முந்தைய விற்பனையாளர்கள் தரப்பினர்களாக உள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் உள்ளபோது வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்தது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் தவறானது என்று நானே ஒப்புக்கொண்டுள்ள நிலையில் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் முந்தைய விற்பனையாளரின் பத்திரத்தில் தடவழி குறிப்பிட்டு இல்லை என ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.